2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

வாசனை திரவிய தொழிற்சாலை

***15198—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி.முட்லூர் பகுதியில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி.முட்லூர் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் ஆண்டொன்றுக்கு சுமார் 1,031 மெட்ரிக் டன் மல்லிகைப் பூ விளைவிக்கப்படுகிறது. சிதம்பரம் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமையும்பட்சத்தில், அங்கு மல்லிகைப் பூ விளைச்சல் அதிகப்படுத்தப்படும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். மேலும், இத்தொழிற்சாலை அமையும்பட்சத்தில், நேரடியாகவும், மறைமுகமாகவும் பலரும்*

வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை ஏற்று, மறுபரிசீலனை செய்து, அங்கு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் மல்லிகைப் பூக்கள் 171.76 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. இதிலிருந்து சுமார் 1,031 மெட்ரிக் டன் மல்லிகைப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சாகுபடி செய்யப்படும் மல்லிகைப் பூக்கள் முழுவதும் கும்பகோணம், கடலூர் மற்றும் உள்ளூர் சந்தைகளுக்கு அனுப்பப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், மலர்களின் விளைச்சல் ஆண்டு முழுவதும் சீராக இருப்பதில்லை என்பதால், சி.முட்லூர் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பே இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 10–35

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி அருகிலிருக்கிற காட்டுமன்னார்கோவில் பகுதியில் சுமார் 2,500 ஏக்கரில் பருத்தி விளைவிக்கப்படுகிறது. இதன்மூலம் ஆண்டொன்றிற்கு இருபதாயிரம் குவிண்டால் அளவில் பருத்தி கிடைக்கிறது. விளைவிக்கப்படும் பருத்தியை வெளி மாவட்டங்களில் வியாபாரிகள்மூலம் விற்று வருகின்றனர். சிதம்பரம் பகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத்தின்மூலம் நூற்பாலை ஒன்று அமைத்துத் தந்தால் பருத்தி விளைச்சல் அதிகப்படுத்தப்படும். மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் நூற்பாலை இங்கு அவசியம். இதனை விவசாயிகளுக்கு அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலை என்பது கைத்தறித் துறை தொடர்புடையது. மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது. இதுபோல் தொழில் நடத்துவதற்கு தொழில் முனைவோர்கள் முன்வந்தால் நம்முடைய துறையின் சார்பில் மூன்று விதமான கடன் வழங்கும் திட்டங்கள் இருக்கின்றன. தொழில் முனையக்கூடிய அந்தத் தொழில் முனைவோர்களுக்கு துறையின் சார்பில் கடன் வழங்கி, தொழில் துவங்குவதற்கான ஆலோசனைகள் வழங்கி, உற்பத்தி செய்து, விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு எல்லா பணிகளையும் நம்முடைய அரசு செய்து தரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நம்முடைய சிதம்பரம் தொகுதியில் மட்டும் இத்துறையின் மூலமாக 3 சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 72 நபர்களுக்கு ரூ.1 கோடியே 27 இலட்சம் மானியத்துடன் ரூ.3 கோடியே 94 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் தொடங்கப்பட்டிருக்கின்றன. கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 501 நபர்களுக்கு இரண்டு வருடத்தில் ரூ.11 கோடியே 87 இலட்சம் மானியத்துடன் ரூ.37 கோடியே 3 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், தொழில் துவங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் யார் வந்தாலும் அரசு உதவி செய்து தொழில் துவங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம்

***51661—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—